புதிய இலக்கை நோக்கி எனது வெற்றி பயணம்

REG NO : UDYAM-TN-27-0035057

# காக்கி காவலர் போட்டி தேர்வு பயிற்சி மையம்

**8300902015 | கல்லுக்குழி, திருச்சி.**

---

**வருங்கால காவலர்களே!!!!**

இன்று நவம்பர் 27,2022 நடைபெற்ற இரண்டாம் நிலை காவலர் (TNUSRB- PC -2022) தேர்வுக்கான விடைத்தாள் (ANSWER KEY) இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

உங்கள் விடைகளை இங்கே சரிபார்த்து பயனடைவீர்!!!!! நன்றி 🙏

**"ALL THE BEST STUDENT'S "**

***********************

# தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியம், சென்னை – 08.

## பொதுத் தேர்வு – 2022

(இரண்டாம் நிலை காவலர் இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர்)

**எழுத்து தேர்வு**

| வினாத்தாளின் வகை | சேர்க்கை எண் | வினாத்தாளின் வரிசை எண் |
|---|---|---|
| **D** | 3410650 | 7057760 |
| | **OMR** விடைத்தாளின் எண் | |
| | 306410 | |

காலம் : 2 மணி 40 நிமிடங்கள் முதன்மை எழுத்துத்தேர்வு மொத்த மதிப்பெண்கள் : 70

தமிழ் மொழி தகுதித் தேர்வு மொத்த மதிப்பெண்கள் : 80

## அறிவுரைகள்

1. இந்த வினாத்தாளை தேர்வுகூட கண்காணிப்பாளரின் அறிவுறுத்தல் பெற்ற பின்னரே திறக்க வேண்டும்.
2. இந்த வினாத்தாளில் பகுதி – I முதன்மை எழுத்துத்தேர்வு (பொது அறிவு பிரிவில் 45 வினாக்கள் மற்றும் உளவியல் பிரிவில் 25 வினாக்கள்) பகுதி – II தமிழ் மொழி தகுதித் தேர்வு (இப் பிரிவில் 80 வினாக்கள்) என இரண்டு பிரிவுகளாக கொடுக்கப்பட்டுள்ளன.
3. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
4. ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு மதிப்பெண் வழங்கப்படும்.
5. சேர்க்கை எண் மற்றும் OMR விடைத்தாளின் எண்ணை அதற்குரிய இடங்களில் வினாத்தாளின் முதல் பக்கத்தில் எழுதவும்.
6. இந்த வினாத்தாளின் வகை மற்றும் சரியான விடைகளை விடைத்தாளில் (A, B, C, or D) என அதற்குண்டான இடத்தில் நீலம் (அல்லது) கருப்பு நிற பால் பாயின்ட் பேனாவை கொண்டு பட்டை தீட்டவும்.
7. வினாத்தாளின் வகையை பட்டை தீட்டாவிட்டால், அவ்விடைத்தாள் மதிப்பிடப் படமாட்டாது.
8. ஒரு வினாவிற்கு ஒரு விடையை மட்டுமே தேர்வு செய்து பட்டை தீட்டவும்.
9. தவறாகவோ, ஒரு வட்டத்திற்கு மேல் பட்டை தீட்டினாலோ, அடித்தல் திருத்தங்கள் செய்தாலோ அந்த விடைக்கு மதிப்பெண் கிடையாது.
10. வினாத்தாளில் ஏதேனும் அச்சுப் பிழையோ, பக்கங்கள் சரியாக இல்லாவிட்டாலோ, தேர்வுகூட கண்காணிப்பாளரிடம் முறையிட்டு எழுத்து தேர்வு தொடங்குவதற்கு முன் சரியான மற்றுமொரு வினாத்தாளைப் பெற்று கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

SEAL

SEAL

## பகுதி – I

## முதன்மை எழுத்து தேர்வு

## பிரிவு – அ : பொது அறிவு

1. அதிக எண்ணிக்கையிலான ________ இருப்பதால் சென்னை "ஆசியாவின் டெட்ராய்டு" என்று அழைக்கப்படுகிறது.

   (A) வாகன தொழிற்சாலைகள்

   (B) மென்பொருள் நிறுவனங்கள்

   (C) கணினி வன்பொருள் நிறுவனங்கள்

   (D) ஆயத்த ஆடை நிறுவனங்கள்

2. வாக்கியம் I : பணவீக்கம் என்பது விலைகள் உயர்ந்து பணத்தின் மதிப்பு வீழ்ச்சியடைவதையும் குறிக்கும்.

   வாக்கியம் II : பணவாட்டம் என்பது விலைகள் குறைந்து பணத்தின் மதிப்பு உயர்வதைக் குறிக்கும்.

   (A) I மட்டும் சரி
   (B) II மட்டும் சரி
   (C) I மற்றும் II சரி
   (D) I மற்றும் II தவறு

3. பொருத்துக.

   I. பாஸ்பரஸ் — a. மின்விளக்கிற்கான இழைகள்

   II. டங்ஸ்டன் — b. தீப்பெட்டிகள் தயாரித்தல்

   III. கிராஃபைட் — c. இராக்கெட் எரிபொருள் பற்ற வைப்பான்

   IV. போரான் — d. பென்சில்கள் தயாரித்தல்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | c | b | d | a |
| (B) | b | a | c | d |
| (C) | b | a | d | c |
| (D) | d | c | b | a |

KAKKI POLICE ACADEMY, TRICHY

4. பொருத்துக.

| | | |
|---|---|---|
| I. பாலாறு | | a. பச்சையாறு |
| II. காவிரி | | b. சின்னாறு |
| III. தாமிரபரணி | | c. பவானி |
| IV. தென் பெண்ணையாறு | | d. கிளியாறு |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | c | b | a | d |
| (B) | d | c | a | b |
| (C) | b | a | d | c |
| (D) | d | c | b | a |

5. பொருத்துக.

| | |
|---|---|
| I. INS விக்ராந்த் | a. போர் விமானம் |
| II. தேஜஸ் | b. விமானம் தாங்கி |
| III. GSLV | c. ராக்கெட் ஏவுதல் வாகனம் |
| IV. வந்தே பாரத் | d. அரை அதிவேக ரயில் |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | a | b | c | d |
| (B) | b | a | c | d |
| (C) | c | a | b | d |
| (D) | a | c | d | b |

6. கீழ் உள்ளவற்றுள் எது/எவை புதை வடிவ பொருட்கள் ?

(A) தார்

(B) தார் மற்றும் நிலக்கரி

(C) நிலக்கரி மற்றும் பெட்ரோலியம்

(D) பெட்ரோலியம் மற்றும் அணுக்கரு கனிமங்கள்

KAKKI POLICE ACADEMY, TRICHY

7. வாக்கியம் I : நமது சூரியக்குடும்பமானது, பால்வெளி வீண்மீன் திரள் மண்டலத்தின் ஒரு பகுதி ஆகும்.

வாக்கியம் II : நமது சூரியக் குடும்பத்தில் 8 கோள்கள் உள்ளன.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

8. வாக்கியம் I : புவி தன் அச்சில் தன்னைத் தானே ஒருமுறை சுற்றி வருவதற்கு 24 மணிநேரம் எடுத்துக் கொள்கிறது. இதன் காரணமாக பகல், இரவு ஏற்படுகிறது.

வாக்கியம் II : "லீப் வருடம்" இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வருகிறது.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

9. தலைநகரை டெல்லியிலிருந்து தௌலதாபாத்திற்கு மாற்றியவர் யார் ?

(A) முகமது பின் துக்ளக்
(B) அலாவுதீன் கில்ஜி
(C) பால்பன்
(D) இல்துத்மிஷ்

10. பின்வருவனவற்றுள் எது வேர் அல்ல ?

(A) உருளைக்கிழக்கு
(B) கேரட்
(C) பீட்ரூட்
(D) முள்ளங்கி

11. இந்தியாவில் தற்பொழுது அறிமுகப்படுத்தப்பட்ட அலைக்கற்றை

(A) 2-ஜி
(B) 3-ஜி
(C) 4-ஜி
(D) 5-ஜி

12. எந்த டெல்லி சுல்தான் வேலையின்மை பிரச்சனையை தீர்க்க "வேலைவாய்ப்பு அலுவலகத்தை" அமைத்தார் ?

(A) முகம்மது பின் துக்ளக்
(B) அலாவுதீன் கில்ஜி
(C) ஃபெரோஷ் ஷா துக்ளக்
(D) பால்பன்

13. வாக்கியம் I : யானை தமிழ்நாட்டின் மாநில விலங்கு.

வாக்கியம் II : பனைமரம் தமிழ்நாட்டின் மாநில மரம்.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

KAKKI POLICE ACADEMY, TRICHY

**14.** வாக்கியம் I : ஒளியின் திசைவேகம் ஒலியின் திசைவேகத்தை விட குறைவு என்பதால் இடிச் சத்தம் கேட்பதற்கு முன்னரே மின்னல் நம் கண்களுக்கு தெரிகிறது.

வாக்கியம் II : உயரமான கட்டடங்களை மின்னல் பாதிப்பிலிருந்து பாதுகாக்க உதவும் கருவி மின்னல் கடத்தி ஆகும்.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

**15.** 1857 ஆம் ஆண்டு புரட்சி நடைபெற்றபோது முகலாய மன்னராக பதவி வகித்தவர்

(A) அக்பர்
(B) ஔரங்கசீப்
(C) இரண்டாம் பகதூர்ஷா
(D) நானா சாகிப்

**16.** தவறான இணையை கண்டறிக.

| | |
|---|---|
| I. பொதுத்துறை | a. சேவை நோக்கம் |
| II. தனியார் துறை | b. இலாப நோக்கம் |
| III. முதன்மைத்துறை | c. கோழி வளர்ப்பு |
| IV. மூன்றாம் துறை | d. தொழிற்சாலைகள் |

(A) பொதுத்துறை – சேவை நோக்கம்
(B) மூன்றாம் துறை – தொழிற்சாலைகள்
(C) முதன்மைத்துறை – கோழி வளர்ப்பு
(D) தனியார் துறை – இலாப நோக்கம்

**17.** தாஜ்மஹால் __________ நதிக்கரையில் அமைந்துள்ளது.

(A) காவிரி (B) யமுனா (C) கோதாவரி (D) கங்கை

**18.** எந்த ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் 'NOTA' அறிமுகப்படுத்தப்பட்டது ?

(A) 2002 (B) 2005 (C) 2014 (D) 2017

**19.** கோடைப் பருவத்தில் இந்தியாவின் வடகிழக்கு பகுதியில் வீசும் உள்ளூர் தலக்காற்றின் பெயர்

(A) நார்வெஸ்டர்ஸ்
(B) 'லூ'
(C) மாஞ்சாரல்
(D) பருவக்காற்று

KAKKI POLICE ACADEMY, TRICHY

20. சிம்கார்டு, ஏ.டி.எம். கார்டுகள் ________ என்ற குறைகடத்தியால் ஆக்கப்பட்டிருக்கும்

(A) சிலிகான்

(B) இரும்பு

(C) அலுமினியம்

(D) காப்பர்

21. இங்கிலாந்து நாட்டின் தற்போதைய மன்னர் யார் ?

(A) இளவரசி எலிசபெத் II

(B) ஜார்ஜ் மன்னர்

(C) மன்னர் மூன்றாம் சார்லஸ்

(D) இராணி விக்டோரியா

22. 'பிரிதிவிராஜ் ராசோ' எனும் காவியத்தை இயற்றியவர் ?

(A) சந்த் பார்தை

(B) பிரிதிவிராஜ் சௌகான்

(C) காளிதாஸ்

(D) அமீர் குஸ்ரூ

23. ஆடம்ஸ் ஆப்பிள் என்பது இதன் வளர்ச்சியைக் குறிக்கிறது

(A) தொண்டைக்குழி

(B) தைராய்டு

(C) குரல்வளை

(D) பாராதைராய்டு

24. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| I. | இமயமலைத் தொடர் | a. | வட அமெரிக்கா |
| II. | ராக்கி மலைத் தொடர் | b. | தென் அமெரிக்கா |
| III. | ஆல்ப்ஸ் மலைத் தொடர் | c. | ஐரோப்பா |
| IV. | ஆண்டிஸ் மலைத் தொடர் | d. | ஆசியா |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | b | c | d | a |
| (B) | c | d | a | b |
| (C) | d | b | a | c |
| (D) | d | a | c | b |

KAKKI POLICE ACADEMY -8300902015 TRICHY

25. வாக்கியம் I : குதுப்மினார் குத்புதீன் ஐபக்கால் தொடங்கப்பட்டு இல்துமிஷால் கட்டி முடிக்கப்பட்டது.

வாக்கியம் II : குதுப்மினார் ஹைதராபாத்தில் உள்ளது.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

26. இந்தியாவின் தேசிய மரம்

(A) ஆலமரம்
(B) அரச மரம்
(C) வேப்ப மரம்
(D) மாமரம்

27. இந்தியாவின் குறுக்கே செல்லும் சிறப்பு அட்சம் எது ?

(A) கடகரேகை
(B) மகரரேகை
(C) புவிநடுக்கோடு
(D) துருவ வட்டம்

28. விஜய நகர பேரரசிற்கு வந்த இத்தாலியப் பயணி

(A) மார்கோபோலோ
(B) நிக்கோலோ கோண்டி
(C) டோமிங்கோ
(D) பாஇபான

29. வாக்கியம் I : வெவ்வேறு அளவுள்ள திடப்பொருளை பிரிப்பது சலித்தல் எனப்படும்.

வாக்கியம் II : வெவ்வேறு எடையுள்ள திடப்பொருளை பிரிப்பது தூற்றுதல் எனப்படும்.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

30. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| I. | மொகஞ்சதாரோ | a. | கல்வி நகரம் |
| II. | லோத்தல் | b. | வணிக நகரம் |
| III. | மதுரை | c. | பெருங்குளம் |
| IV. | காஞ்சி | d. | கப்பல் கட்டும் தளம் |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | d | c | b | a |
| (B) | c | d | a | b |
| (C) | b | a | c | d |
| (D) | c | d | b | a |

KAKKI POLICE ACADEMY- 8300902015, TRICHY

31. பொருத்துக.

| | |
|---|---|
| I. காற்றழுத்தமானி | a. பாலின் தூய்மை |
| II. நீரியல் அழுத்தி | b. சர்க்கரையின் அடர்த்தி |
| III. பால்மானி | c. வளிமண்டல அழுத்தம் |
| IV. சர்க்கரைமானி | d. பாஸ்கல் விதி |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | c | a | d | b |
| (B) | c | d | a | b |
| (C) | d | c | b | a |
| (D) | b | c | d | a |

32. புவியில் காணப்படும் நீரில், ________ நீரானது கடல்களிலும், பெருங்கடல்களிலும் காணப்படுகிறது.

(A) 50%
(B) 75%
(C) 97%
(D) 60%

33. மஞ்சள் காமாலையால் (ஹெப்படைடிஸ் பி வைரஸ்) பாதிக்கப்படும் உறுப்பு எது ?

(A) கல்லீரல்
(B) நுரையீரல்
(C) சிறுநீரகம்
(D) மூளை

34. வாக்கியம் I : நெட்பிளிக்ஸ், ஹாட்ஸ்டார், அமேசான் பிரைம் என்பவை பிரபலமான OTT தளங்கள்.

வாக்கியம் II : OTT என்பதன் விரிவாக்கம் "Over The Top"

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

35. தவறான இணையை கண்டறிக.

| பதவி | குறைந்த பட்ச வயது |
|---|---|
| I. குடியரசுத் தலைவர் | a. 35 வயது |
| II. ராஜ்யசபா உறுப்பினர் | b. 30 வயது |
| III. லோக்சபா உறுப்பினர் | c. 21 வயது |
| IV. சட்ட மேலவை உறுப்பினர் | d. 30 வயது |

(A) குடியரசுத் தலைவர் வயது – 35 வயது

(B) ராஜ்ய சபா உறுப்பினர் – 30 வயது

(C) லோக்சபா உறுப்பினர் – 21 வயது

(D) சட்ட மேலவை உறுப்பினர் – 30 வயது

36. பொருத்துக.

| | |
|---|---|
| I. பண்டையக் கால கல்விமுறை | a. RTE – 2009 |
| II. வார்தா கல்வித் திட்டம் | b. 1992 |
| III. கட்டாயக் கல்வி சட்ட விதி | c. குருகுலக் கல்வி முறை |
| IV. புதிய கல்விக் கொள்கை திருத்தம் | d. காந்தியடிகள் |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | c | b | d | a |
| (B) | a | d | c | b |
| (C) | c | d | a | b |
| (D) | c | d | b | a |

37. இந்திய அரசமைப்பின் எந்த சட்டப்பிரிவு இந்திய அரசமைப்பின் 'இதயம் மற்றும் ஆன்மா' என டாக்டர் அம்பேத்கர் குறிப்பிடுகிறார் ?

(A) சட்டப்பிரிவு 21
(B) சட்டப்பிரிவு 45
(C) சட்டப்பிரிவு 32
(D) சட்டப்பிரிவு 35

38. முட்டைகள் அழுகும் போது ______ வாயு உருவாவதால் துர்நாற்றம் வீசுகின்றது.

(A) ஆக்ஸிஜன்
(B) ஹைட்ரஜன் சல்பைடு
(C) கார்பன்-டை-ஆக்சைடு
(D) சல்பர்-டை-ஆக்சைடு

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

39. வடுஆர் பறவைகள் சரணாலயம் உள்ள மாவட்டம் எது ?

(A) திருவாரூர் (B) திருநெல்வேலி (C) காஞ்சிபுரம் (D) அரியலூர்

40. "AN UNCERTAIN GLORY" என்ற புத்தகத்தை எழுதியவர்

(A) ஜவஹர்லால் நேரு

(B) அமர்த்தியா சென்

(C) சுவாமி விவேகானந்தா

(D) Dr. A. P. J. அப்துல் கலாம்

41. இந்தியாவின் மீது 17 முறை படையெடுத்து இந்திய செல்வங்களை சூறையாடியவர் யார் ?

(A) கஜினி மாமூது

(B) முகமது கோரி

(C) செங்கிஸ்கான்

(D) தைமூர்

42. வாக்கியம் I : நமது இந்திய தேசிய கொடியில் உள்ள சக்கரத்தில் 40 ஆரங்கள் உள்ளது

வாக்கியம் II : தேசிய கீதமானது 52 வினாடிகளில் பாடி முடிக்கப்பட வேண்டும்.

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி

(D) I மற்றும் II தவறு

43. தவறான இணையை கண்டறிக.

| இரத்த வகை | யாரிடமிருந்து இரத்தம் பெற முடியும் |
|---|---|
| I. A | a. A, O |
| II. B | b. B, O |
| III. AB | c. AB, O |
| IV. O | d. O மட்டும் |

(A) A – A, O (B) B – B, O (C) AB – AB, O (D) O – O மட்டும்

44. வாக்கியம் I : கௌதம புத்தரால் பௌத்த மதம் தோற்றுவிக்கப்பட்டது.

வாக்கியம் II : பௌத்த மதம் திகம்பரம் சுவேதம்பரம் என பிரிவுகளாக பிரிந்தது.

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி

(D) I மற்றும் II தவறு

45. எவ்வகை தாது தசைகளின் செயல்திறனை ஒழுங்குபடுத்துகின்றது ?

(A) கால்சியம்

(B) பொட்டாசியம்

(C) சோடியம்

(D) அயோடின்

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

## பிரிவு – ஆ : உளவியல்

**46.** சாய்சதுரத்தின் மூலைவிட்டங்களுக்கு இடையே உள்ள கோணம்

(A) 120° (B) 180° (C) 90° (D) 100°

**47.** i) ரமா என்பவர் ராணியை விட அதிக மதிப்பெண்கள் எழுத்துள்ளார்.

ii) ராணி என்பவர், ரத்னாவை விட குறைவான மதிப்பெண்கள் எடுத்துள்ளார்.

iii) ரத்னா, ரமாவை விட அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.

iv) பத்மா என்பவர் ரமாவை விட அதிக மதிப்பெண்களும், ரத்னாவை விட குறைவான மதிப்பெண்களும் பெற்றுள்ளார்.

இதில் யார் மிக அதிக மதிப்பெண் பெற்றுள்ளார் ?

(A) ரமா (B) பத்மா (C) ராணி (D) ரத்னா

. "இரவியின் அம்மா என்னுடைய அம்மாவுக்கு ஒரே மகள்" என்று கமல் சொன்னால், கமல் இரவிக்கு என்ன உறவு ?

(A) தாத்தா (B) அப்பா (C) சகோதரர் (D) தாய்மாமன்

ேழ கொடுக்கப்பட்டுள்ள பை விளக்கப்படத்தை படித்து, பின்வரும் **49-51** கேள்விகளுக்கு தில் அளிக்கவும்.




**49.** எந்த சங்கத்திலும் உறுப்பினர் இல்லாதவரின் சதவீதம் என்ன ?

(A) 5%

(B) 8%

(C) 10%

(D) 6%

KAKKI POLICE ACADEMY -8300902015, TRICHY

50. கிரிக்கெட் விளையாட்டு சங்கத்தினர் மட்டுமே, மற்றும் கால்பந்து சங்கத்தினர் மட்டு
ஆகியோரின் பங்கீடு என்ன ?

(A) 1 : 3 (B) 2 : 1 (C) 1 : 2 (D) 3: 1

51. கிரிக்கெட் மற்றும் கால்பந்து சங்கங்களின் உறுப்பினர்களான மாணாக்கர்கள் எத்தனை ?

(A) 500 (B) 650 (C) 550 (D) 600

கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டை விளக்கப்படம், 2021 இல் பல மாநிலத்தின் அரிசி மற்று கோதுமையின் உற்பத்தி அளவை குறிக்கிறது. விளக்கப்படத்தை படித்து, பின்வரும் 52-53 கேள்விகளுக்கு பதில் அளிக்கவும்.




KAKKI POLICE ACADEMY- 8300902015, TRICHY

52. அரிசி மற்றும் கோதுமை மொத்த உற்பத்தி அளவு எந்த மாநிலத்தில் குறைவாக உள்ளது ?

(A) B (B) C (C) D (D) E

53. எந்த மாநிலத்தில் அரிசி உற்பத்தி அதிகமாக உள்ளது ?

(A) A (B) B (C) C (D) D

54. விடைக்கேற்ற வினாவைத் தெரிவு செய்க. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் ஆகும்.

(A) இரட்டைக் காப்பியங்கள் யாவை ?

(B) இரட்டைக் காப்பியங்கள் என்றால் என்ன ?

(C) சிலப்பதிகாரத்தின் சிறப்புப் பெயர் யாது ?

(D) சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இலக்கண நூல்களா ?

55. கீழ்க்கண்ட தொடர்களில் சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க

(A) வாலைப்பழம் உடலுக்கு மிகவும் நல்லது

(B) வாழைப்பலம் உடளுக்கு மிகவும் நல்லது

(C) வாழைப்பழம் உடலுக்கு மிகவும் நல்லது

(D) வாளைப்பழம் உடலுக்கு மிகவும் நள்ளது

56. வேறுபட்டு இருப்பதை தேர்ந்தெடுத்து எழுதுக

(A) நாற்காலி (B) மேசை (C) ரேடியோ (D) அல்மிரா

57. கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்களில் விடுபட்ட எண்ணை தேர்வு செய்யவும்




(A) 27 (B) 35 (C) 54 (D) 64

58. இரண்டு நாணயங்கள் ஒன்றாகச் சுண்டப்படுகின்றன. இரண்டு நாணயங்களிலும் வெவ்வேறு முகங்கள் கிடைப்பதற்கான நிகழ்தகவு

(A) $\frac{1}{2}$ (B) $\frac{3}{2}$

(C) 2 (D) 1

59. பொருத்துக.

I. விற்பனை விலை — a. அடக்கவிலை – விற்பனை விலை

II. நட்டம் — b. விற்பனை விலை – அடக்க விலை

III. இலாபம் — c. வாங்கிய விலை + கூடுதல் செலவுகள்

IV. அடக்க விலை — d. குறித்த விலை – தள்ளுபடி

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | d | a | b | c |
| (B) | a | b | c | d |
| (C) | d | b | a | c |
| (D) | b | a | c | d |

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

60. ஒரு வாத்து இரு வாத்துகளுக்கு முன்னால் உள்ளது. ஒரு வாத்து இரு வாத்துகளுக்கு பின்னால் உள்ளது. ஒரு வாத்து மத்தியில் உள்ளது. அங்கு எத்தனை வாத்துகள் உள்ளன ?

(A) 5 (B) 3 (C) 7 (D) 4

61. பின்வரும் சொற்தொடர்களில் தகுந்த இணையான சொல்லைக் கண்டுப்பிடித்து விடையளிக்கவும்

மனிதன் : நடப்பது :: மீன் : ?

(A) நீந்துதல் (B) சாப்பிடுதல் (C) ஓடுதல் (D) பறப்பது

62. 'புயல்' – என்பதற்கு இணையான ஆங்கிலச் சொல் எது ?

(A) TEMPEST (B) LAND BREEZE

(C) TORNADO (D) STORM

63. வாக்கியம் I : 2018 ஆம் ஆண்டு லீப் ஆண்டு.

வாக்கியம் II : 400 ஆல் வகுபடும் நூற்றாண்டுகள் லீப் ஆண்டுகள் ஆகும்.

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி

(D) I மற்றும் II தவறு

64. எந்த வெண்வரைபடம் இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களுக்குள் இருக்கும் தொடர்பை சரியாக குறிக்கிறது ?

வினாடி, நிமிடம், மணிநேரம்

(A) 

(B) 

(C) 

(D) 

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

## பகுதி – II
## தமிழ் மொழி தகுதித் தேர்வு

71. தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறக் காரணமாக இருந்தவர்

(A) சாவித்திரிபாய் பூலே
(B) பண்டித ரமாபாய்
(C) முத்துலெட்சுமி
(D) மலாலா

72. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடிக்க. "தெரிந்த அளவில் அறிவுடையவனாகத் தோன்றுவான்"

(A) மாற்றாரை மாற்றும் படை
(B) கண்டானாம் தான்கண்ட வாறு
(C) ஆன்ற பெருமை தரும்
(D) கேளாது நட்டார் செயின்

73. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாச் சொல்லைக் கண்டறிக

(A) காலை மாலை
(B) உள்ளும் புறமும்
(C) விருப்பு வெறுப்பு
(D) வாடி வதங்கி

74. "கொல்லிப்பாவை" என்னும் சிற்றிதழ் நடத்தியவர் யார் ?

(A) சுரதா
(B) ஈரோடு தமிழன்பன்
(C) ராஜமார்த்தாண்டன்
(D) வைரமுத்து

75. ஓவியம் வரையப் பயன்படும் துணி

(A) படாம்
(B) சுவர்
(C) குகை
(D) செப்பேடு

76. பொருத்துக.

I. பாக்கு, பாட்டு — a. உயிர்தொடர்க் குற்றியலுகரம்
II. பஞ்சு, பங்கு — b. வன்தொடர்க் குற்றியலுகரம்
III. வரகு, முதுகு — c. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்
IV. எஃகு, அஃது — d. மென்தொடர்க் குற்றியலுகரம்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | d | a | c | b |
| (B) | a | d | c | b |
| (C) | b | d | a | c |
| (D) | c | d | a | b |

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

77. தேவநேயம் என்ற நூலைத் தொகுத்தவர் யார் ?

(A) இரா. இளங்குமரனார்
(B) பெருஞ்சித்திரனார்
(C) தந்தை பெரியார்
(D) பாரதிதாசன்

78. "பரந்தொருங்கு ஈண்டிய பாடை மாக்களும்" அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்

(A) பல்லக்கு தூக்குபவர்
(B) பல இன மக்கள்
(C) பல தொழில் செய்வோர்
(D) பலமொழி பேசும் மக்கள்

79. தவறான இணையை கண்டறிக.

I. ஆறு — a. இரு கரைகளுக்கு இடையே ஓடும் நீர்ப்பரப்பு
II. கடல் — b. அலைகளைக் கொண்ட உப்பு நீர்ப் பெரும்பரப்பு
III. ஊற்று — c. மலையில் இருந்து கீழ்நோக்கி விழும் நீர்நிலை
IV. ஏரி — d. வேளாண்மைப் பாசன நீர்த்தேக்கம்

(A) ஆறு – இரு கரைகளுக்கு இடையே ஓடும் நீர்ப்பரப்பு
(B) கடல் – அலைகளைக் கொண்ட உப்புநீர்ப் பெரும் பரப்பு
(C) ஊற்று – மலையில் இருந்து கீழ்நோக்கி விழும் நீர்நிலை
(D) ஏரி – வேளாண்மைப் பாசன நீர்த்தேக்கம்

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

80. வாக்கியம் I : ஆண்பாற் பிள்ளைத்தமிழ் – சிற்றில், சிறுபறை, சிறுதேர்.
வாக்கியம் II : பெண்பாற் பிள்ளைத்தமிழ் – கழங்கு, அம்மானை, ஊசல்.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

81. வாக்கியம் I : வல்லின மெய்களின் மேல் ஊர்ந்து வரும் உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் இருந்து குறைந்து அரை மாத்திரையில் ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் எனப்படும்.
வாக்கியம் II : கு, சு, டு, து, பு, று – என்பவை குற்றியலுகரச் சொற்கள் ஆகும்.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

82. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக

(A) வளையாபதி
(B) யசோதர காவியம்
(C) குண்டலகேசி
(D) மணிமேகலை

83. பின்வருவனவற்றுள் முறையான தொடர் எது ?

(A) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு

(B) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு

(C) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு

(D) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

84. பொருத்துக.

I. குளிர்ந்த சோலை a. மத்தள ஒலியாய் எழுதல்

II. தாமரை மலர்கள் b. கண்கள் விழித்துப் பார்த்தல்

III. சூழும் மேகங்கள் c. விளக்குகள் போல் தோன்றுதல்

IV. குவளை மலர்கள் d. மயில்கள் ஆடுதல்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | b | c | d | a |
| (B) | d | c | a | b |
| (C) | d | a | b | c |
| (D) | c | a | d | b |

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

85. வாக்கியம் I : பூக்காமலே காய்க்கும் மரங்கள் சில உள்ளன எனச் சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

வாக்கியம் II : விதைகள் பாத்தி அமைத்து விதைத்தால்தான் முளைக்கும் என்கிறது இந்நூல்.

(A) I மட்டும் சரி (B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி (D) I மற்றும் II தவறு

86. மேல் இதழும் கீழ் இதழும் பொருந்துவதால் பிறக்கும் மெய்யெழுத்துகள் எவை ?

(A) ர், ழ் (B) ப், ம் (C) த், ந் (D) ட், ண்

87. வாக்கியம் I : 'கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்' என்று பெருமைப்படுபவர் பாரதியார்.

வாக்கியம் II : கம்பராமாயணத்திற்கு 'இராமவதாரம்' எனப் பெயரிட்டவர் பாரதியார்.

(A) I மட்டும் சரி (B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி (D) I மற்றும் II தவறு

88. வாக்கியம் I : ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடிவது வெண்பாவாகும்.

வாக்கியம் II : ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடிவது கலிப்பாவாகும்.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

89. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது

(A) விளக்கு
(B) கல்வி
(C) விளையாட்டு
(D) பாட்டு

90. "மழையும் புயலும்" என்னும் நூலை இயற்றியவர் யார் ?

(A) வ. ராமசாமி
(B) மு. வரதராசனார்
(C) க. சச்சிதானந்தன்
(D) சு. வெங்கடேசன்

91. 'பனைமரம்' என்பது எதற்கு எடுத்துக்காட்டு ?

(A) உம்மைத் தொகை
(B) வேற்றுமைத் தொகை
(C) வினைத் தொகை
(D) இரு பெயரொட்டுப் பண்புத் தொகை

92. திருஆலவாயிலில் உறையும் இறைவன் யார் ?

(A) முருகப் பெருமான்
(B) முத்துக்குமார சாமி
(C) சிவபெருமான்
(D) பெருமாள்

93. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| I. | ஆரி | a. | சிறப்பு |
| II. | ஊழி | b. | முறை |
| III. | ஊழ் | c. | யுகம் |
| IV. | பீடு | d. | அருமை |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | d | c | b | a |
| (B) | d | a | b | c |
| (C) | d | b | a | c |
| (D) | d | c | a | b |

KAKKI POLICE ACADEMY, 8300902015, TRICHY

94. தவறான இணையை கண்டறிக.

I. திருக்குறளின் மூலத்தை அச்சிட்டவர் — a. தஞ்சை ஞானப் பிரகாசர்

II. திருக்குறளுக்கு முதலில் உரை எழுதியவர் — b. மணக்குடவர்

III. திருக்குறளில் இருமுறை வரும் அதிகாரம் — c. நட்பு

IV. திருக்குறளை ஆங்கிலத்தில் முதலில் மொழிபெயர்தவர் — d. ஜி. யு. போப்

(A) திருக்குறளை ஆங்கிலத்தில் முதலில் மொழிபெயர்த்தவர் – ஜி. யு. போப்

(B) திருக்குறளில் இருமுறை வரும் அதிகாரம் – நட்பு

(C) திருக்குறளின் மூலத்தை அச்சிட்டவர் – தஞ்சை ஞானப் பிரகாசர்

(D) திருக்குறளுக்கு முதலில் உரை எழுதியவர் – மணக்குடவர்

95. மூன்று புள்ளிகளை உடைய தனித்த வடிவம் பெற்ற சொல் எது ?

(A) குற்றியலுகரம்
(B) உயிரள பெடை
(C) அஃகேனம்
(D) உயிர்மெய்

96. தவறான இணையை கண்டறிக.

I. பறந்த — a. பறவை

II. படித்த — b. பையன்

III. வந்த — c. நின்றான்

IV. சென்று — d. பார்த்தான்

(A) பறந்த – பறவை
(B) படித்த – பையன்
(C) வந்த – நின்றான்
(D) சென்று – பார்த்தான்

97. கனவினும் இன்னாதது எது ?

(A) கயவர் நட்பு

(B) பேதையர் நட்பு

(C) சொல்வேறு செயல்வேறு உள்ளவர் நட்பு

(D) தீயவர் நட்பு

98. "மதுரை பதிற்றுப்பத்தந்தாதி" என்னும் நூலை இயற்றியவர் யார் ?

(A) பாரதியார்
(B) குமரகுருபரர்
(C) பெருஞ்சித்தனார்
(D) பரஞ்சோதி முனிவர்

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

99. ஒரு பாடலின் அடி, சீர்களில் எவ்வெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடை

(A) முதல் எழுத்து
(B) இரண்டாம் எழுத்து
(C) இறுதி எழுத்து
(D) மைய எழுத்து

100. சா.கந்தசாமி எழுதிய எப்புதினத்திற்கு சாகித்திய அகாடெமி விருது கிடைத்துள்ளது ?

(A) சாயாவனம்
(B) விசாரணைக் கமிஷன்
(C) சில நேரங்களில் சில மனிதர்கள்
(D) சுடுமண் சிலைகள்

101. மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம் எதைப் போன்றது ?

(A) அகம்பாவம்
(B) மாணிக்கக் கோயில்
(C) அன்பு பாதை
(D) தடம் மறைந்துப் போதல்

102. வாக்கியம் I : இந்திர விழா நடைபெற்ற நாட்கள் இருபத்தாறு என மணிமேகலை கூறுகிறது.

வாக்கியம் II : பசியும் பிணியும் பகையும் பெருகலும் மழையும் வளமும் நிறையவும் என முரசறைவோன் வாழ்த்தினான்.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

103. 'நோன்றல்' என்ற சொல்லின் பொருள் யாது ?

(A) மறவாமை
(B) உறவினர்
(C) வறியவர்
(D) பொறுத்தல்

104. நிரை என்ற ஓரசைச்சீரின் வாய்பாடு தருக ?

(A) பிறப்பு
(B) மலர்
(C) காசு
(D) நாள்

105. வாக்கியம் I : மதுரைப்பக்கம் மாட்டுச் சந்தையை "மாட்டுத் தாவணி" என்று சொல்வார்கள்.

வாக்கியம் II : கிராமச் சந்தையில் ஆண்கள் மட்டுமே வந்து விற்பனை செய்வார்கள்.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

106. குழந்தைகள் கல்வி கற்கச் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தவர்

(A) பக்தவச்சலம்

(B) எம். ஜி. ராமச்சந்திரன்

(C) ஜெ. ஜெயலலிதா

(D) கு. காமராசர்

107. சாந்த குணம் உடையவர்கள் ________ முழுவதையும் பெறுவர்.

(A) புத்தகம் (B) செல்வம் (C) உலகம் (D) துன்பம்

108. ஜெயகாந்தன் எழுதாத புதினம் எது ?

(A) சுந்தரகாண்டம்

(B) கங்கை எங்கே போகிறாள்

(C) இன்னும் ஒரு பெண்ணின் கதை

(D) சேற்றில் மனிதர்கள்

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

109. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| I. | அடிசில் | a. | மணம் |
| II. | வெறி | b. | சோறு |
| III. | மடிவு | c. | பலாப்பழம் |
| IV. | வருக்கை | d. | சோம்பல் |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | b | a | c | d |
| (B) | b | a | d | c |
| (C) | a | d | c | b |
| (D) | d | c | b | a |

110. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| I. | ஆசியாவின் மிகப் பழமையான நூலகம் | a. | கொல்கத்தா தேசிய நூலகம் |
| II. | இந்தியாவின் முதல் பொது நூலகம் | b. | லைப்ரரி ஆப் காங்கிரஸ் |
| III. | இந்தியாவின் மிகப் பெரிய நூலகம் | c. | சரஸ்வதி மகால் |
| IV. | உலகின் மிகப்பெரிய நூலகம் | d. | திருவனந்தபுரம் நடுவண் நூலகம் |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | c | d | a | b |
| (B) | b | c | d | a |
| (C) | c | d | b | a |
| (D) | d | a | b | c |

111. வாக்கியம் I : 'உம்' எனும் இனச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் பொருள்களில் வரும்.

வாக்கியம் II : 'மட்டும்' எனும் இடைச்சொல் வரையறைப் பொருள் தருகிறது.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

112. வாக்கியம் I : பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, நாகரிகம், பண்பாடு, வீ முதலியவற்றை வெளிப்படுத்தும் நூலாக புறநானூறு விளங்குகிறது.

வாக்கியம் II : "யாண்டு" என்பது 'எனது' என்னும் பொருளில் புறநானூற்றுப் பாடல் குறிப்பிடப்படுகிறது.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

113. சீர்காழி இரா. அரங்கநாதன் அவர்களின் பிறந்த நாள் ____________ நாளாகக் கொண்டாடப்படுகிறது.

(A) தேசிய கல்வி நாள்
(B) தேசிய உரிமை நாள்
(C) தேசிய மருத்துவர் நாள்
(D) தேசிய நூலக நாள்

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

114. உவமை, உவமேயம் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறும் அணி எது ?

(A) உவமை
(B) உருவகம்
(C) தீவகம்
(D) நிரல்நிறை

115. "சமயக் கணக்கர்" என்பவர் யார் ?

(A) சமயத்தத்துவ வாதிகள்
(B) நேரத்தைக் கணக்கிடுவோர்
(C) சமையல் செய்பவர்
(D) தூதர்

116. 'வாய்த்தீயின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது எது ?

(A) வாய் + தீயின்
(B) வாய்த்து + ஈயின்
(C) வாய்த்து + தீயின்
(D) வாய் + ஈயின்

117. பொருத்துக.

| | | |
|---|---|---|
| I. | சுருங்கிய பழம் | a. ஒல்லிக்காய் |
| II. | சூட்டினால் பழுத்த பிஞ்சு | b. சிவியல் |
| III. | குளுகுளுத்த பழம் | c. வெம்பல் |
| IV. | தென்னையில் கெட்ட காய் | d. அளியல் |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | b | c | d | a |
| (B) | b | d | a | c |
| (C) | b | a | c | d |
| (D) | b | d | c | a |

118. முதல் எழுத்துகள் மட்டும் இடம்பெறும் சொல் எது ?

(A) சரி (B) குருவி (C) கிளி (D) ஆம்

119. பொருத்துக.

| | | |
|---|---|---|
| I. | கோட்டி | a. போர் |
| II. | பொலம் | b. மழை |
| III. | வசி | c. பொன் |
| IV. | கலாம் | d. மன்றம் |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | d | c | b | a |
| (B) | b | d | c | a |
| (C) | a | b | c | d |
| (D) | c | d | a | b |

120. சாகித்திய அகாடெமி விருது பெற்ற முதல் பெண் எழுத்தாளர் யார் ?

(A) ராஜம் கிருஷ்ணன் (B) எம். எஸ். சுப்புலட்சுமி

(C) பால சரஸ்வதி (D) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

121. கீழ்க்காண்பனவற்றுள் காதில் அணியும் அணிகலன் எது ?

(A) குழை

(B) சுட்டி

(C) சிலம்பு

(D) கிண்கிணி

122. வாக்கியம் I : தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர்.

வாக்கியம் II : எகர, ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைந்தவர் வீரமாமுனிவர்.

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி

(D) I மற்றும் II தவறு

123. வாக்கியம் I : 'மதுரை செல்லும் வழி யாது ?' என்ற வினாவிற்கு இப்பக்கமாகச் செல்ல வேண்டும் என்று கூறுவது 'சுட்டு விடை' ஆகும்.

வாக்கியம் II : 'கடைக்குப் போவாயா ?' என்ற வினாவிற்குப் போக மாட்டேன் என மறுத்துக் கூறுதல் 'மறைவிடை' ஆகும்.

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி

(D) I மற்றும் II தவறு

KAKKI POLICE ACADEMY - 8300902015 TRICHY

124. தவறான இணையை கண்டறிக.

I. எஸ். இராமகிருஷ்ணன் — a. கால் முளைத்த கதைகள்

II. தாராபாரதி — b. இது எங்கள் கிழக்கு

III. கவிமணி தேசிய விநாயகனார் — c. ஆசிய ஜோதி

IV. தாயுமானவர் பாடல்கள் — d. புதிய விடியல்கள்

(A) தாராபாரதி – இது எங்கள் கிழக்கு

(B) எஸ். இராமகிருஷ்ணன் – கால் முளைத்த கதைகள்

(C) கவிமணி தேசிக விநாயகனார் – ஆசிய ஜோதி

(D) தாயுமானவர் பாடல்கள் – புதிய விடியல்கள்

125. வாக்கியம் I : தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது தமிழர் மரபு.

வாக்கியம் II : வாழை இலையில் மருத்துவப் பயன்கள் உள்ளன.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

126. "முதற்கருவி" என்ற பெயரில் அழைக்கப்படும் இசைக்கருவி எது ?

(A) மத்தளம்
(B) சங்கு
(C) கொம்பு
(D) பறை

127. கல்லணையின் கட்டுமான உத்தியைக் கொண்டு கட்டப்பட்ட அணை

(A) தௌலீஸ்வரம்
(B) கிருஷ்ணராஜசாகர்
(C) ஹீராகுட்
(D) பவானி சாகர்

128. பின்வருவனவற்றுள் விகுதி பெற்ற தொழிற்பெயர்

(A) எழுது (B) பாடு (C) படித்தல் (D) நடி

129. வாக்கியம் I : இத்தாலி நாட்டைச் சேர்ந்த கடற்பயணி மார்க்கோபோலோ ஆவார்.

வாக்கியம் II : முந்நீர் வழக்கம் என்று கடல் பயணத்தைக் குறிப்பிடும் நூல் – அகநானூறு.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

130. புகழ் கொண்ட குறளொடு அகம்புறமும் – செம்

பொருள் கண்ட தமிழ்ச்சங்கம் ...

– என்ற இப்பாடலின் ஆசிரியர் யார் ?

(A) பாரதியார்
(B) உடுமலை நாராயணகவி
(C) பாரதிதாசன்
(D) செயங்கொண்டார்

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

**131.** பொருத்துக.

I. பண்புத் தொகை — a. சிவப்பு சட்டை பேசினார்

II. உவமைத் தொகை — b. செங்காந்தள்

III. உம்மைத் தொகை — c. மலர்க்கை

IV. அன்மொழித் தொகை — d. தாய் சேய்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | d | a | b | c |
| (B) | b | d | a | c |
| (C) | c | b | a | d |
| (D) | b | c | d | a |

**132.** தமிழ்நாட்டில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ள இடம் ?

(A) சிந்துசமவெளி

(B) ஆந்திர மேரூர்

(C) கீழடி

(D) ஆதிச்ச நல்லூர்

**133.** பின்வருவனவற்றுள் குமரகுருபரரால் எழுதப்படாத நூல் எது ?

(A) தந்தர் கலிவெண்பா

(B) தேம்பாவணி

(C) மதுரைக் கலம்பகம்

(D) நீதி நெறி விளக்கம்

**134.** காலம் கரந்த பெயரெச்சம் __________ ஆகும்.

(A) வேற்றுமைத் தொகை

(B) வினைத் தொகை

(C) பண்புத் தொகை

(D) உவமைத் தொகை

**135.** வாக்கியம் I : கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கூறியவர் – கம்பர்.

வாக்கியம் II : விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்சியை உவமையாக்கியவர் – இளங்கோவடிகள்.

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி

(D) I மற்றும் II தவறு

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

136. வாக்கியம் I : தமிழகம் வந்து மருத்துவராகி வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர் ஐடாஸ் சோபியா ஸ்கட்டர்.

வாக்கியம் II : பெண்களின் உயர்வுக்கு துணை நின்றவர் பண்டித ரமாபாய்.

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி

(D) I மற்றும் II தவறு

137. 'மல்லிகை மலர்ந்தது' – என்பது

(A) வேற்றுமைத்தொடர்

(B) வினைமுற்றுத்தொடர்

(C) எழுவாய்த்தொடர்

(D) விளித்தொடர்

138. சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயராகப் பணிபுரிந்தவர்

(A) முத்துலெட்சுமி

(B) கமலா

(C) சத்தியவாணிமுத்து

(D) தமிழரசி

139. "அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும் பெருங்கலி வங்கம்" என கப்பலைப் பற்றிக் கூறும் நூல் எது ?

(A) அகநானூறு

(B) புறநானூறு

(C) கலித்தொகை

(D) பதிற்றுப்பத்து

140. எதுகை இடம் பெறாத இணையை எடுத்து எழுதுக

(A) இரவு – இயற்கை

(B) வங்கம் – சங்கம்

(C) அசைவு – இசைவு

(D) உலகு – புலவு

141. திரைப்படப்பாடல் ஆசிரியராகப் புகழ் பெற்றவர்

(A) ஆலங்குடி சோமு

(B) தீபங்குடி ராமு

(C) விருதுப்பட்டி பாரி

(D) சின்னாளப்பட்டி மாரி

142. பின்வருவனவற்றுள் ஒருவர் "எண்பேராயம்" எனும் குழுவைச் சார்ந்தவர் அல்லர்

(A) சாரணர்

(B) கரும விதிகள்

(C) யானை வீரர்

(D) இவுளி மறவர்

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

143. ‘திருவானைக்கா உலா’ என்ற நூலின் ஆசிரியர் யார் ?

(A) ஒட்டக்கூத்தார்
(B) கம்பர்
(C) காளமேகப் புலவர்
(D) சேக்கிழார்

144. மழை சடசடவெனப் பெய்தது – இத்தொடரில் அமைந்துள்ளது

(A) அடுக்குத்தொடர்
(B) இரட்டைக்கிளவி
(C) தொழிலாகுபெயர்
(D) பண்பாகு பெயர்

145. ‘இளிவரல்’ என்பது __________ சுவையினைச் சுட்டுகிறது.

(A) நகை
(B) துன்பம்
(C) இன்பம்
(D) வெகுளி

146. பொருத்துக.

I. தோல் கருவிகள் — a. யாழ், வீணை
II. கஞ்சக் கருவிகள் — b. குழல், சங்கு
III. காற்றுக் கருவிகள் — c. சாலரா, சேகண்டி
IV. நரம்புக் கருவிகள் — d. முழவு, முரசு

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | a | b | c | d |
| (B) | c | b | d | a |
| (C) | b | c | a | d |
| (D) | d | c | b | a |

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

147. பொருத்துக.

I. நேர் நிரை — a. புளிமா
II. நிரை நேர் — b. கூவிளம்
III. நேர் நேர் — c. கருவிளம்
IV. நிரை நிரை — d. தேமா

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | b | d | c | a |
| (B) | b | a | d | c |
| (C) | b | a | c | d |
| (D) | b | d | a | c |

148. "மல்லெடுத்த" என்பதின் பொருள்

(A) போர்
(B) தரும்
(C) வலிமைபெற்ற
(D) வயல்

149. பொருத்துக.

I. தனித்தமிழ் இயக்கம் — a. நா. பார்த்தசாரதி
II. குறிஞ்சி மலர் — b. வ. ராமசாமி
III. மழையும் புயலும் — c. இரா. பி. சேதுபிள்ளை
IV. தமிழின்பம் — d. இரா. இளங்குமரனார்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | d | b | a | c |
| (B) | d | c | a | b |
| (C) | d | b | c | a |
| (D) | d | a | b | c |

KAKKI POLICE ACADEMY - 8300902015, TRICHY

150. 'என்னுடன் ஊருக்கு வருவாயா ?' என்ற வினாவிற்கு 'வராமல் இருப்பேனா ?' என்று கூறுவது

(A) ஐய வினா
(B) வினா எதிர் வினாதல் விடை
(C) இனமொழி விடை
(D) ஏவல் விடை

65. 'D A R K' என்பதன் குறியீடு E B S L எனில் 'B A C K' என்பதன் குறியீடு எது ?

(A) D B E M (B) C B D L (C) C B E L (D) C B D M

66. 'அம்மா பசிக்குது. எனக்குச் சோறு வேணும்' – இத்தொடரில் உள்ள பேச்சு வழக்குச் சொற்களுக்குச் சரியான எழுத்து வழக்குச் சொற்களைத் தேர்வு செய்க.

(A) அம்மா பசிக்கிறது. எனக்குச் சோறு வேண்டும்

(B) அம்மா பசிக்குது. எனக்குச் சோறு வேண்டும்

(C) அம்மா பசிக்கிறது. எனக்குச் சோறு வேணும்

(D) அம்மா பசிக்கிறது. என்கு சோறு வேணும்

67. 40 மாணவர்கள் உள்ள ஒரு வரிசையில், மணி என்பவர் வலமிருந்து 14 வது நிலையில் இருக்கிறார். இடமிருந்து அவரது நிலை என்ன ?

(A) 24th (B) 25th (C) 26th (D) 27th

68. ராமின் வீடு கிருஷ்ணனின் வீட்டிலிருந்து தெற்கு நோக்கி உள்ளது. கோவிந்தாவின் வீடு கிருஷ்ணனின் வீட்டிலிருந்து கிழக்கு நோக்கி அமைந்திருந்தால், ராமின் வீடு கோவிந்தாவின் வீட்டிலிருந்து எந்த திசையில் அமைந்துள்ளது ?

(A) வட கிழக்கு (B) வட மேற்கு (C) தென் கிழக்கு (D) தென் மேற்கு

69. ஒரு செவ்வகத்தின் ஒவ்வொரு பக்கமும் இரு மடங்காகும் போது அதனுடைய பரப்பளவு __________ மடங்காகும்.

(A) 2 (B) 3 (C) 4 (D) 6

70. கரகாட்டத்தை கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது ?

(A) கரகாட்டம் என்றால் என்ன ?

(B) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை ?

(C) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும் ?

(D) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை ?